அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் இல: 197(111).

எனது இல.5/3 ஈ 708 டி.
தாபனப் பகுதி,
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7.
1982, பெப்புரவரி 25 ஆம் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

சம்பள மீளாய்வுக் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப் படுத்தல் - 1981.12.29ஆந் தேதிய 197ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்று நிருபத்திற்கான திருத்தம்.

---

01. 10.05ஆம் சம்பளத் திட்டத்தின் (3)ஆம் நிரலில் காணப்படும் 'தற்காலிக வருடாந்த சம்பள சீரமைப்பு' மேல்வரும் புதிய திரட்டிய சம்பளத் திட்டங்களைப் பொறுத்த வரையில் பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படுதல் வேண்டும்.

| தற்போதைய சம்பள நிலை | புதிய வருடாந்த சம்பளத் திட்டம் | தற்காலிக வருடாந்த சம்பள சீரமைப்பு |
|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா |
| 9,240 | 14,880 | 204 |
| 9,600 | 15,240 | 240 |
| 9,960 | 15,600 × 480 | 276 |
| 10,320 | 16,080 | 192 |

02. 125ஆம் பக்கத்திலும்(சிங்களம்) 138ஆம் பக்கத்திலும்(தமிழ்) 150ஆம் பக்கத்திலும்(ஆங்கிலம்) (5)ஆம் நிரலில் கொடுக்கப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் 1ஆந் தரமும் விசேட தரங்களும் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட புதிய திரட்டிய வேதனத் திட்டம் பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

"ரூபா 12,120-7×240–5×360-ரூபா 15,600"

03. 13:10ஆம் 13:11ஆம் சம்பளத் திட்டங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

(அ) 13:10ஆந் சம்பளத் திட்டத்திற்குப் பதிலாக
14:03ஆந் சம்பளத் திட்டம் புகுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) 13:11ஆந் சம்பளத் திட்டத்திற்குப் பதிலாக
14:04ஆந் சம்பளத் திட்டம் புகுத்தப்படுதல் வேண்டும்.

(இது 197(II)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தை ஒரு குறிப்பிட்ட வழங்கலினால் ஏலவே அறிவிக்கப்பட்டுள்ளது.)

04. 8ஆம் பக்கத்தில் உள்ள குறிப்பு 2(அ)ஆம் பந்தி திரும்பக் கூறப்பட்டிருப்பதாகும். அக்குறிப்பிற் கொடுக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களுக்கும் அது பொருந்தும்.

05. சில தரங்களைப் பொறுத்த வரையில் புதிய திரட்டிய வேதனத் திட்டங்கள் நீண்டவையாயும், அதனால் உயர்ந்த எல்லையுடையவையாயும் உள்ளன. இச் சந்தர்ப்பங்களைப் பொறுத்தவரையில் சுற்று நிருபத்தின் 4(II)ஆம் பந்தியின் இறுதி வசனம் பொருந்தாது.

எனவே ஒரு உத்தியோகத்தர், தன்னுடைய அந்திய சம்பளத் திட்டத்தில் 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு மேலாகத் தேங்கியிருப்பின், புதிய வேதனத் திட்டத்தில், உச்ச வேதனத்தை எல்லையாக வைத்துக் கொண்டு, சம அளவு வேதன வேற்றங்களை அளிப்பதன் மூலம் தேங்குதற் சலுகை அவருக்கு அளிக்கப்படுதல் வேண்டும். இச் சலுகை 1982.01.01ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

06. எல்.பி.டி.சில்வா சம்பளத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்தபின், மீளாயப்பட்ட/மறுசீரமைக்கப்பட்ட சம்பளத் திட்டங்களையுடைய சில தரங்களுக்குப் பொருத்தமான புதிய திரட்டிய வேதனத் திட்டங்கள் 11ஆம் அநுபந்தத்திற் கொடுக்கப்பட்டுள்ளது. அச்சம்பளத் திட்டங்களின் அடிப்படையில் 1981 டிசம்பரில் ஒரு உத்தியோகத்தருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டிருக்குமாயின், புதிய திரட்டிய சம்பளத் திட்டத்திற்கு மாற்றுதல், 1981 டிசம்பர் மாதத்தில் பெற்ற உண்மையான சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டேயிருக்கும். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் "குறைவினால் மீளாயப்பட்டவை அல்லது தேவைப்படும் எனக் கருதப்பட்ட மறுசீரமைப்புக்கள்" என்னும் தலைப்பின் கீழுள்ள வேதனத் திட்டங்கள் உண்மையாகக் கொடுபடவில்லை. அவைகள் வேதன மாற்றத்திற்குப் பிரயோகிக்கப்பட வேண்டிய "கருதுகோள் முறையான" வேதனத் திட்டங்களாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவ்வாறான உத்தியோகத்தரினால் 1981, டிசம்பரில் பெறப்பட்ட சம்பளம் முதலில் படிப்படியான அடிப்படையில் 'கருதுகோள் முறையான' சம்பளத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும். அதற்குப் பின் புதிய திரட்டிய வேதனத் திட்டத்தில் உள்ள அதோடு ஒத்த சம்பள நிலைக்கு மாற்றஞ் செய்யப்படுதல் வேண்டும்.

07. ஒரு நிலைப்படுத்தப்பட்ட வேதனமுடைய உத்தியோகத்தரின் சம்பளம் 1981.12.31ஆந் தேதியன்று எச்சம்பள நிலையிலிருந்தாலுஞ் சரி அவருக்கு 1982.01.01ஆந் தேதி தொடக்கம் அந்நிலைப்படுத்தப்பட்ட சம்பளமே கொடுக்கப்படுதல் வேண்டும்.

08. 17.11ஆம் வேதனத் திட்டம் மேலதிகச் செயலாளர்களுக்கும் மாவட்டச் செயலாளர்களுக்கும் பொருத்தமுடைத்து.

09. அரசாங்க சேவையில் தான் இறுதியாகப் பெற்ற சம்பளத்தைப் பெறுதல் வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு அரசாங்க பதவிக்கு மீளப் பணிக்கமர்த்தப்பட்ட ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கு 197ஆம் இலக்க அரசாங்கச் சுற்று நிருபத்தின் பிரகாரம் அச்சம்பளத்திற்கு ஒத்த சம்பளம் 1982.01.01ஆந் தேதி தொடக்கம் கொடுக்கப்படுதல் வேண்டும். மீளப் பணிக்கமர்ந்தவோரிற்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளியின் அடிப்படையிலான வாழ்க்கைச் செலவுப் படியும் அதற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

ஒப்பம்: டீ. பீ. ஐ. பீ. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.